## Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 118/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : ராமு | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2025

---

**முதல் விசாரணை:**

நான் வில்லாணியில் குடியிருந்து சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ராமர் என்பவரை எனக்கு தெரியும். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 யை எனக்கு தெரியும். கடந்த 07.04.2019ம் தேதியன்று கருமாத்துார் கழுவநாதன் கோவிலில் விசேஷம் வைத்திருந்தார். அங்கு விசேஷம் முடிந்து கழுவநாதன் கோவிலிருந்து அ.சா. 1 மற்றும் அ.சா. 2 மற்றும் அவரது குடும்பத்தினரை சேர்ந்த குழந்தைகள் மற்றும் அ.சா.2ன் மனைவி ஆகியோர்களை எனது ஆட்டோவில் ஏற்றி கொண்டு உசிலம்பட்டி நோக்கி வந்து கொண்டிருந்த போது சுமார் 4.00 மணியளவில் தி.விலக்கு அருகே ஒரு லாரி இண்டிகேட்டர் போடாமல் திடீரென திரும்பியதால் எனது ஆட்டோவிற்கு முன்பு சென்று கொண்டிருந்த அ.சா.1ன் கணவரின் இருசக்கர வாகனத்தில் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

2. இறந்த ராமர் என்பவருக்கு மேற்படி விபத்தில் தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. ராமர் வாகனத்திற்கு பின்னால் 100 அடி துாரத்தில் அவரது குடும்பத்தின உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநரை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்தபோது நான் பார்த்தேன். தற்போது மேற்படி நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். மேற்படி ராமர் அவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களால் இறந்துவிட்டார். ராமர் சென்ற இருசக்கர வாகனம் மதுரை ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக வந்து கொண்டிருந்தது லாரி உசிலம்பட்டியிலிருந்து மேற்கிலிருந்து கிழக்காக வந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

3) விபத்தில் இறந்த ராமர் எனது உறவினர் ஒரே ஊர்காரர் ஆவார். நான் உசிலம்பட்டி தேவர் சிலை ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுகிறேன். மதுரை மாவட்டத்தில் எங்கு சவாரி வந்தாலும் செல்வோம். விபத்து சமயத்தில் மதுரை மாவட்டத்தில் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அனுமதி பெற்றிருந்தேன். காலையில் அவர்கள் சுமார் 5 மணிக்கு கோவிலுக்கு காரில் சென்றார்கள். காசிநாதனும் ராமரும் பைக்கில் சென்றார்கள். விசேஷம் முடிந்து கோவிலிருந்து மதியம் 2.30 மணிக்கு மேல் கிளம்பினோம். விபத்தில் இறந்த ராமன் எங்களுக்கு முன்பாக கிளம்பினார் என்றால் சரியல்ல ஒன்றாக தான் கிளம்பினோம். இருசக்கர வாகனம் வேகமான செல்லும் என்றால் சரிதான் ஆனால் ராமன் வேகமாக செல்லவில்லை. ராமர் எங்கள் ஆட்டோவிலிருந்து 100 மீட்டர் முன்பாக சென்றுகொண்டிருந்தார்கள். ஆட்டோவில் மொத்தம் 3 பெரியவர்கள் 3 குழந்தைகள் இருந்தார்கள். விபத்து நடந்த சமயம் 3.00 –4.00 மணிக்குள் இருக்கும். தி.விலக்கில் மதுரை – தேனி ரோடு நேராக செல்கிறது என்றால் சரிதான். மேற்கிலிருந்து வரும் வாகனம் கிழக்கிலிருந்து வரும் நபர்களுக்கு தெளிவாக தெரியும் என்றால் சரிதான். தி.விலக்கில் திருமங்கலம் ரோடு தெற்காக பிரிந்து செல்கிறது என்றால் சரிதான். திருமங்கலம் ரோடு தெற்கிலிருந்து நேராக செல்கிறது என்றால் சரிதான். திருமங்கலம் சாலையொட்டி தெற்குபுறம் விபத்து நடந்தது என்றால் சரியல்ல மதுரை – தேனி சாலையில் நடுபகுதியில் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடம் திருமங்கலம் சாலைக்கு வடக்கு பக்கம் நடுபகுதியில் நடந்தது.

3) எதிரி ஓட்டி வந்த லாரிக்கு பின்பக்கத்தில் மோதி விபத்து நடந்தது என்றால் பின்பக்க டையருக்கு முன்னால் மோதி விபத்து நடந்தது. இறந்த ராமர் சாலையின் நடுபகுதியில் விழுந்து கிடந்தார். 108 ஆம்புலன்ஸ்சிற்கு யாரும் போன் போடவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு அவர்கள் சென்றத்திலிருந்து 20 நிமிடத்தில் சென்றுவிட்டேன். ராமன் பைக் சூப்பர் ஸ்பிளேண்டர் பதிவெண் தெரியாது. லாரியின் பதிவெண் தெரியாது. எதிரியின் பெயர், முகவரி தற்போது வரை எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பின்பு போலீசார் என்னை விசாரித்தார்கள். இறந்த ராமர் எதிரியின் வாகனத்தை கவனிக்காமல் இருசக்கர வாகனத்தில் வேகமாக ஓட்டி வந்து லாரி பின்பகுதியில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல, இறந்த ராமர் உறவினர் என்பதால் அவரது குடும்பத்தினர் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து எதிரியின் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S.d./Ramu
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.